இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 22-06-2024

# தேர்தல் ஆணையம்தான் நிரூபிக்க வேண்டும்!

உலகப் புகழ்பெற்ற தொழில் அதிபரான எலான் மஸ்க், வாக்குப் பதிவு இயந்திரங்கள் குறித்து வெளியிட்ட பதிவானது, இந்திய அரசியல் களத்தில் வெப்ப அலைகளை மட்டுமல்ல, சந்தேக அலைகளையும் அதிகரித்துள்ளது.

மஸ்க் தம்முடைய 'எக்ஸ்' ஊடகப் பக்கத்தில் இப்படிப் பதிவு செய்திருந்தார்....

**“இந்தியாவில் மின்னணு வாக்கு இயந்திரத்தை ஆராய யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால், தேர்தல் நடைமுறையில் வெளிப்படைத்தன்மை குறித்து கடுமையான கவலைகள் எழுப்பப்படுகின்றன. அமைப்புகள் பொறுப்பேற்க இல்லாத போது ஜனநாயகம் ஒரு ஏமாற்று நாடகமாக மாறி, மோசடிக்கு ஆளாகிறது.**

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைத் தவிர்க்க வேண்டும். மனிதர்கள் அல்லது செயற்கை நுண்ணறிவு மூலம் ஊடுருவுவதற்கான ஆபத்துகள் அதிகம். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சிறிய அளவில் முறைகேடு செய்தாலும் அது பெரியதுதான்.”**

என்று அவர் குறிப்பிட்டு இருந்தார். இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் இதனைச் சொல்லி இருக்கிறார். இங்கும் வட மாநிலங்களில் சந்தேகத்துக்குரிய சில நிகழ்வுகள் நடந்திருப்பது அரசல் புரசலாக வெளிவந்த நிலையில், எலான் மஸ்க் பதிவானது உன்னிப்பாக கவனிக்கத்தக்கதாக மாறியது.

கரீபியன் தீவு நாடான புவேர்ட்டோ ரிக்கோவில் நடந்த தேர்தல்களில் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறி, அமெரிக்க அரசியல்வாதியான ராபர்ட் எஃப் கென்னடி, தமது 'எக்ஸ்' பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டார். **இதனைப் பகிர்ந்து, கருத்துரைத்த மஸ்க், “மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் ஒரு கறுப்புப் பெட்டி” என்றும் குறிப்பிட்டிருந்தார்.**

**“மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் மனிதர்கள் அல்லது செயற்கை நுண்ணறிவு மூலம் மேற்கொள்ளப்படும் சிறிய முறைகேடும் (ஹேக்கிங்) மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தும்”** எனக் கூறியிருந்தார்.

இதனை பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் மறுத்தார். “வாக்குப் பதிவு இயந்திரத்தில் எந்த இணைப்பும் இல்லை. புளூடூத் இல்லை. வைஃபை இல்லை, இன்டர்நெட் இல்லை. மறுபுரோகிராம் செய்ய முடியாத புரோகிராமில், உள்ளே நுழைய வழியே இல்லை” என்றும் சொல்லி இருந்தார் அவர்.

பிரச்சினை இயந்திரத்தில் மட்டுமல்ல, இயந்திரத்தைப் பயன்படுத்துபவர்களைப் பொறுத்தும் அதன் தன்மையை மாற்றலாம் என்ற அடிப்படையில், பா.ஜ.க.வின் சில தொகுதிகளின் வெற்றிக்குப் பின்னால் வாக்குப் பதிவு இயந்திரங்களும் மர்மமாக வேலை பார்த்திருக்கலாமோ என்ற சந்தேகம் அரசியல் வட்டாரத்தில் எழுவது இயல்பானது தான். அத்தகைய சந்தேகமே இப்போது பரவி வருகிறது. ராகுல்காந்தி, அகிலேஷ் யாதவ், உத்தவ் தாக்கரே ஆகியோர் இதனை பொதுவெளியில் அதிகம் பேசி வருகிறார்கள்.

**“வாக்குப் பதிவு இயந்திரத்தில் முழு வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்ய வேண்டும்; இல்லையெனில், அவற்றை ஒழித்துக் கட்ட வேண்டும்' என்று தேர்தல் ஆணையத்துக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.**

**“நாட்டின் தேர்தல் நடைமுறையில் தீவிரமான கவலைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆய்வுக்கு உட்படுத்த யாரும்அனுமதிக்கப்படுவதில்லை. ஜனநாயகஅமைப்புகள்கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில், நாட்டின் தேர்தல் நடைமுறை மட்டுமே மக்களுக்கான ஒரே பாதுகாப்பாகும். அதில் முழு வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரங்கள் கறுப்புப் பெட்டியாக மாறிவிட்டன” என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.**

ஆந்திர முன்னாள் முதலவரும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஜெகன் மோகன் ரெட்டியும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “தேர்தலில் வாக்குச்சீட்டு முறைக்கு மாற வேண்டும். ஜனநாயகத்தில் மேம்பட்ட நாடுகளில் வாக்குச்சீட்டு முறையே உள்ளன; வாக்கு இயந்திரங்கள் இல்லை. நமது ஜனநாயகத்தின் உண்மையான உணர்வை நிலைநிறுத்த நாமும் அதை நோக்கி நகர வேண்டும். வாக்கு இயந்திரங்களை அகற்ற வேண்டும்” எனப் பதிவிட்டுள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் மகாராஷ்டிர மாநிலம் - மும்பை வட மேற்குத் தொகுதி தேர்தல் முடிவுதான் பலத்த சந்தேகத்துக்குரியதாக உள்ளது. இங்கு பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சியான ஷிண்டே சிவசேனா வெற்றி பெற்றுள்ளது. அதன் வேட்பாளரான ரவீந்திர வெய்க்கர், வெறும் 48 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார். வாக்குப் பதிவு இயந்திரம் மூலமாக எண்ணிக்கை நடைபெற்ற போது 'இந்தியா' கூட்டணியின் வேட்பாளர்தான் ஒரு வாக்கு வித்தியாசத்தில் முன்னணியில் இருந்தார். தபால் வாக்குகளை எண்ணியதாகவும், அதனால் பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர் 48 வாக்குகள் கூடுதலாகப் பெற்றதாகவும் சொல்லி அவரை வெற்றி பெற்றவராக அறிவித்து விட்டார்கள். இதனை வைத்து மும்பை பத்திரிக்கைகள் பலத்த சந்தேகங்களைக் கிளப்பியது.

மூத்த பத்திரிக்கையாளர் பூனம் அகர்வால், இதில் முறைகேடு நடந்துள்ளது என்கிறார். மும்பையில் இருந்து வெளியாகும் 'மிட் டே' நாளிதழும் முறைகேடு நடந்துள்ளது என்கிறது. 'வெற்றி பெற்ற வேட்பாளரின் உறவினருக்கும், தேர்தல் ஆணையப் பணியாளருக்கும் இதில் தொடர்பு உள்ளது' என்றும், அவர்கள் யார் என்றும் பெயருடன் குறிப்பிட்டு குற்றம் சாட்டியுள்ளது 'மிட் டே'. இதனை வைத்து 'இந்தியா' கூட்டணி, புகார் அளித்துள்ளது.

**இதற்குச் சரியான விளக்கத்தை தேர்தல் ஆணையம் கொடுத்திருக்க வேண்டும். சவாலாக ஏற்று, முறைகேடு நடைபெறவில்லை என மெய்ப்பித்திருக்க வேண்டும். மாறாக 'மிட் டே' நாளிதழ் மீது அவதூறு வழக்குப் போட்டு அவர்கள் வாயை மூட முயற்சித்துள்ளது தேர்தல் ஆணையம். நாட்டில் இருக்கும் சந்தேகத்தை வலுப்படுத்துகிறது இது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.6.2024) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், வருவாய்த் துறையில் பணிபுரியும் துணை ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோரின் பயன்பாட்டிற்காக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 114 புதிய வாகனங்கள் வழங்குவதன் முதற்கட்டமாக 77 புதிய வாகனங்களை (Bolero BSVI ரகம்) கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) முனைவர் ச.நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வருவாய்த்துறை அலுவலர்கள் பயன்பாட்டிற்கு முதல்கட்டமாக

# 77 புதிய வாகனங்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## ரூ.10 கோடியில் 114 வாகனங்கள் வழங்க நடவடிக்கை!

சென்னை, ஜூன் 22-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.6.2024) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், வருவாய்த் துறையில் பணிபுரியும் துணை ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோரின் பயன்பாட்டிற்காக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 114 புதிய வாகனங்கள் வழங்குவதன் முதற்கட்டமாக 77 புதிய வாகனங்களை (Bolero BSVI ரகம்) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல், பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில் இணையவழிச் சேவைகளை வழங்குதல், அலுவலகப் பயன்பாட்டிற்காக வாகனங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல், அனைத்து மாவட்டங்களில் உள்ள முக்கியப் பிரமுகர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்கென 2021-2022 ஆண்டில் 96.10 இலட்சம் ரூபாய் செலவில் 8 புதிய வாகனங்களும், 2022-2023 ஆண்டில் 2.48 கோடி ரூபாய் செலவில் 14 புதிய வாகனங்களும், 2023-2024 ஆண்டில் 2.15 கோடி ரூபாய் செலவில் 10 புதிய வாகனங்களும் 2024-2025 ஆண்டில் 61.46 இலட்சம் ரூபாய் செலவில் 3 புதிய வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வருவாய்த் துறை அலுவலர்கள் தங்கள் பணியினை செம்மையாகவும், விரைவாகவும் மேற்கொள்ளும் வகையில், வருவாய்த் துறையில் பணிபுரியும் 34 துணை ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் மற்றும் 80 வட்டாட்சியர்களின் பயன்பாட்டிற்காக 114 புதிய வாகனங்கள் (Bolero BSVI ரகம்) கொள்முதல் செய்திட 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் முதற்கட்டமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் 77 புதிய வாகனங்களை 26 மாவட்டங்களைச் சேர்ந்த வருவாய்த் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை 3 அலுவலர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) முனைவர் ச. நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வள்ளுவர் கோட்டம் புனரமைப்புப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

*சென்னை, ஜூன் 21-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி 2023-2024 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்,*

*“உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் புகழினை உலகெங்கிலும் கொண்டு செல்ல வள்ளுவர் கோட்ம் 1976ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. கலையழகும், கம்பீரமும் கொண்டு சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள் சுமார் ரூ.80 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் மேற்கொள்ளப்படும்”*

*என அறிவித்தார்கள்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வள்ளுவர் கோட்டம், வடிவமைக்கப்பட்டு 18.9.1974 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டபின் 15.4.1976 அன்று திறந்து வைக்கப்பட்டது.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வடிவமைக்கப்பட்டு உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் கலை நுணுக்கத்தோடு ஆசியாவிலேயே மிகப்பெரியதாக, நடுவில் தூணே இல்லாத அரங்கத்துடன், திருவாரூர் தேரையே சென்னை மாநகருக்குக் கொண்டு வந்ததுபோல் சிற்பத்தேர் உருவாக்கப்பட்டு அதனை வள்ளுவர் கோட்டத்தின் மணிமுடியாய் நிர்மாணித்துக் காண்போரைக் கவரும் வண்ணம் கட்டப்பட்டுள்ளது.*

*அய்யன் திருவள்ளுவரின் புகழ்போற்றும் இந்த மாபெரும் கலைச் சின்னமாகிய வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அரங்கத்தையும், பூங்காவையும், பராமரிக்கவும், தேர், கோபுரம், கலசம், திருவள்ளுவர் சிலை ஆகியவைகளின் நிழல் உருவம் தெரியும் வண்ணம் அமையப் பெற்றிருக்கும் நீர் நிலைகளைப் பராமரிக்கவும், கோட்டம் ஒளிமிக்கதாக என்றென்றும் திகழவும், பார்வையாளர்கள் அமர்ந்து கண்டுகளிக்கவும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைப் பல மடங்கு உயர்த்தவும் வள்ளுவர் கோட்டத்தினைக் காலச் சூழலுக்கு ஏற்றவாறும், மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளுடனும் கலையம்சம் மாறாமல் புனரமைத்திடவும் 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 13.7.2023 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த அரசாணைப்படி அய்யன் வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள், புதிய கட்டுமானப் பணிகள், கூடுதல் பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்துதல் ஆகியவற்றுடன் நடைபெற்றுவரும் புனரமைப்புப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெயகர் முன்னிலையில் ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுரைகள் வழங்கினார்கள். இந்த ஆய்வின்போது செய்தித்துறை கூடுதல் இயக்குநர் எஸ்.செல்வராஜ், இணை இயக்குநர் கு.தமிழ்செல்வராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.*

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! வெ.முத்துகிருஷ்ணன் வரவேற்புரை!

# கறம்பக்குடியில் கலைஞர் நூற்றாண்டு மாபெரும் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் சூர்யா வெற்றிகொண்டான் சிறப்புரை!

*புதுக்கோட்டை, ஜூன் 22-*

*புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கறம்பக்குடி வடக்கு ஒன்றிய, நகர தி.மு.க. சார்பில் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் நாளை (23.06.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் வள்ளுவர் திடல், கறம்பக்குடியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது. கறம்பக்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் வெ.முத்துக்கிருஷ்ணன் வரவேற்புரையாற்றுகிறார்.*

*கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தமிழக சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை, ஊழல் தடுப்புத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், கழக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*இதில் ஆ.செந்தில், தவ. பாஞ்சாலன், மாலா ராஜேந்திரதுரை, டி.சூசைராஜ், சிவ. திருமேனிநாதன், எம். நைனாமுகமது, இ. வின்சென்ட் எல்.பெரியதம்பி, எம்.சதாம் உசேன், பரிமளா செல்லத்துரை, பி.மோகன் எம்.ஏ.லத்தீப், டி,மதிவாணன் எஸ்.சாதிக்பாட்சா, சத்யா ரவிக்குமார், எஸ்.எம். ஷேக்முகமது, வி.கே.வீரப்பன், என்.அப்துல் அஜீஸ், ஏ.செல்வராஜ் ஏ.சி.வெற்றி வேந்தன், ஜி.ரமேஷ், எஸ். சுப்பிரமணியன், ரம்ஜான் பீவி சேக் பகுருதீன், சங்கீதா பன்னீர்செல்வம், பட்டம்மாள் சத்தியமூர்த்தி, எஸ். ரமேஷ், கோ.ராஜேந்திரன், தொ.கருப்பையா, முருகேஸ்வரி ஞானச்சந்திரன், செண்பகவள்ளி செந்தில்குமார், வளர்மதி முத்துக்குமார், உன்னத் பேகம் ஷேக் முகமது, பரக்கத்து நிஷா முகமது நியாஸ், எஸ்.பி. ராஜா, பரிதாபேகம் முகமது சரீப்,*

*எஸ்.ராஜசேகர், கலைவாணி குழந்தையா. என். வாசுவேல், பி.மணிகண்டன், பி.விஜயகுமார், எம்.சந்திரசேகரன், சித்ரா குழந்தையன், வி.கோவிந்தன், டி.ஆர். துரைராஜ், எம்.அப்பு, பி.தங்கமணி, ராஜீவ் உத்திராபதி, கே.அப்துல்.அலீம், பி.விஸ்வநாதன், ஜினி இளங்கோ, ஜி.பழனியப்பன். எஸ்.. ரமேஷ்காந்தி, ஆர்.தர்மராஜ், எம்.கமர்தீன், பி.வெங்கடேசன், ஏ.சந்திரசேகரன், எம். வீரப்பன், ஜி.செல்லத்துரை, பி.பருக், எஸ்.சிவகுரு, கோபாலகிருஷ்ணன், கே.ஆர்.முத்துப்பாண்டி, எம்..பிரபாகரன், எம்.ஏ.டி. ஜியா, சி.வெங்கடேசன், எஸ்.ரமேஷ், அ.தமிழ் செல்வி, பவானிமுத்துக்கருப்பையா, ரெங்கராஜா, பி.. ரெங்கசாமி, ஏ.கே.முத்துக் கிருஷ்ணன், என்.ஆர்.பரிமளம், எஸ்..இளஞ்செழியன், வி.நடராஜன், எஸ்.ஆர். பாலையா, டி.ஜெகந்நாதன், எம்.ராஜேந்திரன், ஜி.லெட்சுமணன், கே.பொன்னையா. என்..ராமநாதன், எஸ்.ஜெகபர் அலி, ஆர்.விஜயபாஸ்கர், ஏ.இளங்கோ வன், இளைய. மனோகரன், கே.அசோக்குமார், ஆர்.முகமதலி ஜின்னா, வி.தயாளன், ஜி.தெட்சிணாமூர்த்தி, கோவி.ரெங்கராசு, எம்.காமராசு, எம்.அடைக்கலசாமி. சி.கலியபெருமாள்,*

*எஸ்.கிருஷ்ணசாமி, எம். சதீஸ்குமார், எம்.தேவராஜ், எஸ்.சரவணன், டி.சங்கர் கே.முத்துவேல், எம்.ராஜ்குமார், எம்.ராஜேந்திரன், ஆர். ராஜா, எஸ்.ராமு, டி.ஆர். எஸ்.முத்து, முகமது அன்சாரி, ஆ.ரவி, எம்.துரைராஜ் பி.பரிமன்தாஸ், புண்ணியமூர்த்தி, ஜி. வினோத்சாய்ராம், ஜி.ஹரிபாஸ்கர் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர். இந்நிகழ்வுகளில் எம். எம்.அப்துல்லா எம்.பி,*

*பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், புதுகை விஜயா, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*கறம்பக்குடி பேரூர் கழக செயலாளர் பேரூராட்சி தலைவர் உ.முருகேசன் நன்றி கூறுகிறார்.*